1984 மார்ச் 21]

(ஆ) ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றி நீர்வரத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) இக்கால்வாய் தற்போதைய நிலையில் தேவையான தண்ணீரை எடுத்துச் செல்லும் திறனுள்ளதால், இதற்கு மேம்பாடு மற்றும் மராமத்துப் பணிகள் எதுவும் தேவையில்லை; இருப்பினும் இக்கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள கிராமங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டம்.

384—(*வினா எண் 22653)—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, குமாரசக்கனாபுரம், முத்தையபுரம், சுப்பலாபுரம், சின்னூர் ஆகிய கிராமங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவைகளின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் வட்டம், சுப்பலாபுரம் கிராமத்தில் ரூ. 3.35 லட்ச மதிப்பீட்டிலும், சின்னூர் கிராமத்தில் ரூ. 7 லட்ச மதிப்பீட்டிலும் குளங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன. குமாரசக்கனாபுரம் மற்றும் முத்தையாபுரம் கிராமங்களில் குளங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஆய்வில் இல்லை.

(இ) ஆய்வில் உள்ள திட்டங்கள் இறுதியாக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளித்த பின் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாய்களின் மூலமாக எத்தனை ஏக்கர் நிலங்கள் சாகுபடி பெறும்? அவற்றிற்கு எந்தக் கால்வாய் மூலமாக தண்ணீர் வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, சின்னூர் கிராமத்தில் ரூ. 7 இலட்சம் மதிப்பீட்டில், அங்கு உள்ள குளத்தின் வாயிலாக 143 ஏக்கர் 64 செண்ட் நிலம் பாசன வசதி பெறும். எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 102.21 டன்கள்.

திருச்சி—தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைக்கும் திட்டம்.

369—(*வினா எண் 17230)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ)—தஞ்சை மற்றும் திருச்சி மாநகரங்களில் நாளொன்றுக்கு 16,000 லிட்டர் பாலைப் பக்குவிக்கும் திறன் கொண்ட பால் பக்குவிக்கும் ஆலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன. திருச்சியிலுள்ள பால் பக்குவிக்கும் தொழிற்சாலையை மேலும் விரிவாக்க ரூபாய் 266.13 இலட்சம் மதிப்பீட்டுக்குத் திட்ட அறிக்கை ஒன்று, பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் அமைக்க, ஒப்புதல் வேண்டி, இந்திய பால்பண்ணை கழகத்துக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 19.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இது 1984-85-ம் ஆண்டு செயல்படவுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பால் பண்ணை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரங்களைத் தெரிவித்தார்கள். இன்னும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ள பல்வேறு இடங்களில் பால் பண்ணை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்து அதை அரசு ஆய்வு செய்துள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.